**No of Printed pages: 4** தேர்வு எண்

# திறன்வளர் ஆசிரியர் மன்றம் மற்றும் வெற்றிக்கு வழி

# மாதிரிப் பொதுத்தேர்வு – ஜனவரி 2017

## தமிழ் முதல் தாள்

## (செய்யுள், உரைநடை)

காலம். 2.30 மணி மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை** : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப்பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு** : (i) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.
(ii) வினாஎண் 49-க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

### பிரிவு–I (மதிப்பெண் : 20)

### பகுதி-1

I. **உரியவிடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **6 x 1 = 6**

1. **திருக்கை வழக்கம் ………… இயற்றிய நூல்களுள் ஒன்று.**
   அ) கம்பர் ஆ) ஒட்டக்கூத்தர் இ) புகழேந்தி
2. **முதலிலார்க்கு ………… இல்லை.**
   அ) நட்பு ஆ) ஊதியம் இ) பகை
3. **மேதி என்பதன் பொருள் …………**
   அ) எருமை ஆ) புலி இ) பன்றி
4. **கணவனை இழந்தோர் மறுமணம் செய்து கொள்வதில் தீங்கில்லை என்றவர் ……**
   அ) அம்பேத்கர் ஆ) பெரியார் இ) அண்ணா
5. **'பண்ணொடு தமிழொப்பாய்' எனத் தொடங்கும் பாடல் இடம்பெறும் நூல் …………**
   அ) திருவாசகம் ஆ) திருக்குறள் இ) தேவாரம்
6. **'மகடூஉ' என்பதன் பொருள் …………**
   அ) ஆண் ஆ) பெண் இ) குழந்தை

### பகுதி - 2

**கோடிட்ட இடத்தை நிரப்புக** **6 x 1 = 6**

7. சதகம் என்பது …….. பாடல்களைக் கொண்ட நூலைக் குறிக்கும்.
8. உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியம் ………..
9. திருநாவுக்கரசரின் இயற்பெயர் ………..
10. 'இந்தியாவின் தேசிய பங்குவீதம்' என்னும் நூலின் ஆசிரியர் ………….
11. இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு ……… இருக்கும்.
12. பதினெண் சித்தர்கள் வளர்த்த மருத்துவம் ………. ஆயிற்று.

**பகுதி - 3**

**பொருத்துக.** **4 x 1 = 4**

13. பண்பு - அ. கூறியது மறாஅமை
14. அன்பு - ஆ. பேதையார் சொல் நோன்றல்
15. அறிவு - இ. தன்கிளை செறா அமை
16. செறிவு - ஈ. பாடறிந்து ஒழுகல்

**பகுதி - 4**

**விடைக்கேற்ற வினா அமைக்க.** **4 x 1 = 4**

17. சங்க இலக்கியங்கள் இனம், மொழி, மதம் கடந்தவை.
18. அறத்தின் அடிப்படையில் தொடங்கியது பழந்தமிழர் வாழ்வு.
19. இராமலிங்கர் தமிழ்மொழியே இறவாத நிலை தரும் என்று கருதினார்.
20. சங்க காலத்தில் பெண்கள் கடல் கடந்து செல்லக்கூடாது.

**பிரிவு–II (மதிப்பெண் : 20)**

**பகுதி-1**

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 5 x 2 = 10**

21. கொக்கை உவமையாகக் காட்டி வள்ளுவர் விளக்கும் கருத்து யாது?
22. கம்பராமாயணத்தின் காண்டங்கள் யாவை?
23. பாவினங்கள் யாவை?
24. பகைமை இருளைப் போக்குவது எதுவென வள்ளுவர் கூறுகிறார்?
25. நீதிமுறைமை எனப்படுவது யாது?
26. “இப்போது இங்கவன் உதவான்” – யார் யாரிடம் கூறியது?
27. பழியில்லா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் கூறுவன யாவை?

**பகுதி - 2**

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 5 x 2 = 10**

28. தமிழ்மொழியின் தனித்தன்மைகளை எழுதுக.
29. செய்திப்படம் என்பது யாது?
30. இயலிசை நாடகக் கலைஞர்கள் யாவர்?
31. நோய் வருவதற்கான காரணம் பற்றி வள்ளுவர் கூறுவதென்ன?
32. காந்தியடிகள் எதனைப் பாவம் என்கிறார்?
33. சத்தியதருமச்சாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது?
34. தமிழில் விரித்தெழுதுக. B.Lit B.A

**பிரிவு–III (மதிப்பெண் : 24)**

**பகுதி-1**

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 3 x 4 = 12**

35. செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதற்குப் பாரதிதாசன் கூறும் வழிவகைகள் யாவை?
36. சீதை, இலக்குவன் ஆகியோரிடம் குகனைப் பற்றி இராமன் கூறியதென்ன?
37. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை?
38. புலியின் கொடுஞ்செயல்கள் பற்றி உமறுப்புலவர் கூறுவன யாவை?
39. ‘நிற்கநேரமில்லை’ என்று சாலை இளந்திரையன் கூறக் காரணம் யாது?

## பகுதி-2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 3 x 4 = 12**

40. பெண்ணுரிமையை விளக்குக.
41. அம்பேத்கர் பெற்ற கல்வித்தகுதிகள் யாவை?
42. பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக.
43. உழவுத்தொழில் குறித்து எழுதுக.
44. மனித நேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?

## பிரிவு–IV (மதிப்பெண்கள் : 10)

**கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க 5**

45. **நல்லேரி னால்செய்யுள் நாற்கரணத் தேர்பூட்டிச்**
**சொல்லேர் உழவர் தொகுத்தீண்டி நல்லநெறி**
**நாலே விதையா நனிவிதைத்து நாற்பொருளும்**
**மேலே பயன்பெறச்செய் விக்குநாள்.**

i) இப்பாடல் வரிகள் இடம் பெற்ற நூல் எது?

ii) நாற்கரணம் விரித்து எழுதுக.

iii) இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடி எதுகைகளை எழுது.

iv) நாற்பொருள் - பிரித்தெழுதுக.

v) நால்வகை நன்னெறிகள் யாவை?

**46. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.** 5

தமிழினம் தனக்குவுமையில்லா ஒரு தனி இனம். தமிழர் நாகரிகம் தன்னகரில்லா நனி நாகரிகம். தமிழர் உணவு, உடை, விருந்து, ஈகை, பொறை, நடுவுநிலைமை, அருள் ஆகிய பண்புகளால் சிறந்திருந்தனர்; உழவையும் தொழிலையும் மதித்திருந்தனர்; வினையை ஆடவர் உயிராகக் கருதினர்; சான்றோனாதலே கல்வியின் முடிவெனப் போற்றினர் ; விருந்தெதிர் கொண்டு வாழ்ந்தனர்; புகழெனில் உயிரையும் கொடுக்க முனைந்தனர்; பழியெனில் உலகைப் பெறவும் மறுத்தனர்; ஈந்து உவந்து இன்பம் கண்டனர். இத்தகைய நாகரிகமும் பண்பாடும் மிக்கவராகத் தமிழர் வாழ்ந்தனர்.

i) தமிழர்களின் நாகரிகம் எத்தகையது?

ii) தமிழர்களின் சிறந்த பண்புகள் யாவை?

iii) கல்வியின் முடிவு எது?

iv) புகழ், பழி குறித்து இப்பத்தியில் கூறப்படுவன யாவை?

v) இவ்வுரைப் பகுதிக்குப் பொருத்தமான தலைப்புத் தருக.

## பிரிவு–V(மதிப்பெண்கள் : 26)

### பகுதி -1

**கீழ்க்காணும் வினாக்களுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.** **2 x 8 = 16**

47. அ) காலமறிதலை வள்ளுவர் வழிநின்று விளக்குக.

**(அல்லது)**

ஆ) புலி வசனித்த படலத்தின் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

48. அ) திரைப்படம் எடுத்தலுக்குத் தேவையான ஆயத்தப் பணிகளை தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) தமிழர் இசைக்கலை குறித்துத் தொகுத்தெழுதுக.

### பகுதி–2

**49. செய்யுள் வடிவில் விடை தருக.** **2+2+3+3=10**

அ) ‘அழுக்காறு’ - எனத் தொடங்கும் குறள்.
ஆ) ‘தில்’ - என முடியும் குறள்.
இ) ‘துன்புள’ - எனத் தொடங்கும் கம்பராமாயணப்பாடல்.
ஈ) ‘திருமறையோர்’ - எனத் தொடங்கும் பெரியபுராணப்பாடல்.

---

**No of Printed pages: 4** தேர்வு எண்

# திறன்வளர் ஆசிரியர் மன்றம் மற்றும் வெற்றிக்கு வழி

## மாதிரிப் பொதுத்தேர்வு – ஜனவரி 2017.

### தமிழ் இரண்டாம் தாள்

(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)

நேரம்.2½மணி மொத்தமதிப்பெண்கள் : 100

அறிவுரை : 1. அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப்பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக்கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்புமையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : 1. இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

2. விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

3. வினா எண் 38க்கு உரிய படிவங்கள் விடைத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளன. அதனைப் பூர்த்தி செய்யவும்.

---

**பிரிவு–I (மதிப்பெண்கள்) : 20**

**அனைத்துவினாக்களுக்கும் விடையளிக்க.**

**பகுதி-1**

**உரியவிடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5 x 1 = 5**

1. மொழிக்கு முதலில் மட்டும் வரும் குறுக்கம் ________

அ) ஆய்தக்குறுக்கம் ஆ) மகரக்குறுக்கம் இ) ஐகாரக்குறுக்கம் ஈ) ஔகாரக்குறுக்கம்

2. சோறு உண்டான் - என்பது ________ தொடர் ஆகும்.

அ) குறிப்பு ஆ) இனங்குறித்தல் இ) வெளிப்படை ஈ) எதுவுமில்லை

3. பின்வரும் சொற்களில் பொதுமொழி _______

அ) கண் ஆ) படம்பார்த்தான் இ) தமிழ்நாடு ஈ) படம்

4. மரவேர் - இச்சொல்லில் அமைந்துள்ள புணர்ச்சி ________

அ) திசைப்பெயர் புணர்ச்சி ஆ) மகர ஈற்றுப் புணர்ச்சி

இ) பண்புப்பெயர் புணர்ச்சி ஈ) உயிரீற்றுப் புணர்ச்சி

5. அகத்திணைகள் ________ வகைப்படும்

அ) ஐந்து ஆ) ஏழு இ) பன்னிரண்டு ஈ) இரண்டு

**பகுதி-2**

**கோடிட்ட இடத்தைநிரப்புக.** **5 x 1 = 5**

6. ஒரு வினைமுற்று எச்சப்பொருளில் வந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிந்தால் அது __________ எனப்படும்

7. கடைக்குச்செல்வாயா? என்ற வினாவிற்கு, “செல்லேன்” என்று விடையளிப்பது________ விடை.

8. மண்ணாசை கருதிப் போருக்குச் செல்வது___________திணை.

9. “உலகு” என்பது திருக்குறளின் ஈற்றுச்சீர் எனில் அதன் வாய்பாடு _________ஆகும்.

10. உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது__________அணி.

**பகுதி-3**

**சுருக்கமாகவிடையளி.** **10 x 1 = 10**

11. சுட்டெழுத்தின் பின் வரும் வல்லினம்_________**(மிகும்/ மிகாது)**

12. கிளி கல்லால் அடிபட்டது. **இது எவ்வகைத்தொடர்?**

13. **கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமை பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக.**

இலக்கியக்கூறுகள் என்பவை மருந்தின் மேலிட்ட இனிப்புப் __________(போன்றவை / போன்றது).

14. பவளவாய் - **விரியுவமையாக மாற்று.**

15. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது. **இப்பழமொழியில் உள்ள மரபுத்தொடரை எடுத்து எழுதுக.**

16. **கீழ்க்காணும் தொடருக்குப் பொருத்தமான நிறுத்தற் குறியிட்டு எழுதுக.**

சட்டத்தை மதிப்போம் குற்றம் களைந்த வாழ்வை வாழ்வோம் சட்டம் நம்மைக் காக்கும்

17. **கீழ்க்காணும் தொடரில் உள்ள பிறமொழிச் சொற்களுக்கு உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.**

வேலன் சுயதொழிலில் அதிக இலாபம் ஈட்டினான்.

18. **கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக.**

அனைத்து துறைகளிலும் ஆண்களை போலவே பெண்களுக்கும் அரசு பணி கொடுக்க வேண்டும்.

19. 'மாலை' - **இருபொருள் தருக**

20. **தொகைச்சொல்லை விரித்தெழுதுக.** - மூவேந்தர்

## பிரிவு- II(மதிப்பெண்) 10

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்றுவரிகளுக்குமிகாமல் விடையளிக்க. 5 x 2 = 10**

21. ஒளகாரக்குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்கு.
22. முற்றெச்சம் என்றால் என்ன?
23. வெளிப்படை விடைகள் யாவை?
24. முதற்பொருள் - என்பது யாது?
25. வடக்கு என்னும் திசைப்பெயருடன் பிற திசைகள் சேரும்போது எவ்வாறு புணரும்?
26. இனங்குறித்தல் என்றால் என்ன? சான்றுடன் விளக்கு.
27. **தெளிந்தோர்** - பகுபத உறுப்பிலக்கணம் தருக

## பிரிவு - III(மதிப்பெண்): 50

*குறிப்பு : பகுதி 3-ல் வினா எண் 35-ல் காதுகேளாத மாணவர்களுக்கு மட்டும் மாற்றுவினா வழங்கப்பட்டுள்ளது.*

### பகுதி-1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க. 2x 5 = 10**

28. வெண்பாவின் இலக்கணம் யாது?

29. **நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்**
**நீங்கின் அதனைப் பிற.** - இதில் பயின்று வந்துள்ள அணியை விளக்கு. **(அல்லது)**
தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.

30. **பின்வரும் குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.**
**அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்**
**பேணித் தமராக் கொளல்.**

### பகுதி-2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டிற்கு ஒவ்வொன்றிற்கும் அரைப்பக்கஅளவில் விடையளிக்க.2x 5 = 10**

31. '**மெல்லமெல்ல மற**' என்னும் சிறுகதையில் கமலநாதன் எவ்வா று மனம் திருந்தினான் என்பதைச் சுருக்கி வரைக.
32. அன்றாட வாழ்வில் பயன்படும் சட்டங்களில் இரண்டினைக் குறித்து எழுதுக.
33. இலின்ட்கிரெனின் பண்புநலன்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

### பகுதி-3

**34. கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க 3+2=5**

(அ) குமரன் டூட்டி முடிந்து ஆபீசில் இருந்து வீட்டிற்கு வந்துகொண்டிருந்தார். வரும் வழியில் ஓர் ஏ.டி.எம்மின் முன் தன் டூவீலரை நிறுத்தினார் . ஹெல்மெட்டை கழற்றி வண்டியின் கண்ணாடியில் தொங்கவிட்டார் . பணம் எடுப்பதற்காக ஏ .டி.எம் முன்னால் மக்கள் நீண்ட கியூவில் காத்திருந்தனர் . குமரனும் அந்த கியூவில் ஜாய்ன்ட் பண்ணினார் . தன்முறை வந்ததும் அவர் உள்ளே நுழைந்து பணத்தை எடுத்தார் . உடனடியாக அவரது செல்போனுக்கு மெசேஜ் வந்தது. அதைச்சரிபார்த்து விட்டு வீட்டிற்குக் கிளம்பினார்.

**(ஆ) கீழ் உள்ள அரபுஎண்களைத் தமிழெண்களாகமாற்றி எழுதுக.**

157, 369, 28, 406

**35. கீழ்க்காணும் ஆங்கில உரைப் பகுதியைத் தமிழாக்கம் செய்க** **3+2=5**

**(அ)** The television is one of the wonders of modern India. Many useful programs on education, health, agriculture and family planning are specially prepared for rural viewers. Interesting dramas and films are shown at regular intervals. The Television is also used for commercial advertisements.

**ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டனுக்கு இணையான தமிழ்ப்பழமொழிகளை எழுதுக.**

1. Eagles never catch flies
2. Little strokes fell great oaks.
3. Familiarity breeds contempt.
4. Self-help is the best help.

**35. குறிப்பு : காதுகேளாத மாணவர்களுக்கான மாற்று வினா** **5x 1 = 5**

கெலன்கெல்லரின் கண்கள் பாரா ; காதுகள் கேளா; வாய் பேசாது . பத்தொன்பது மாதக் குழந்தையாக இருந்தபோது ஏற்பட்ட கொடிய நோய் அவரது மூன்று புலன்களையும் பறித்துக் கொண்டது. ஆசிரியர் அன்னிசல்லிவானின் தீவிர முயற்சிகளாலும் பயிற்சிகளாலும் கெலன்கெல்லர் ஆரம்பக்கல்வியைக் கற்றார். கல்லூரியிலும் சேர்ந்து இளங்கலைப் பட்டவகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

கெலன்கெல்லர் தனது வாழ்நாளை கண்ணிழந்தோர் மற்றும் காதுகேளாதோர்க்காகச் செலவிட்டார் . உலகநாடுகள் பலவற்றிற்கும் சென்று அவர்களுக்காகப் பள்ளிகளைத் திறந்தார். கெலன்கெல்லர் நிதி என ஒன்றைத் தொடங்கி அதன் மூலம் கிடைத்த ஒன்றரைக்கோடி ரூபாயை அப்பள்ளிகளுக்கு வழங்கினார். பார்வையற்றோருக்காகத் தேசியநூலகம் ஒன்றைத் தொடங்கினார்.

1. எந்த வயதில் கெலன்கெல்லர் தன் முப்புலன்களையும் இழந்தார்?
2. அன்னிசல்லிவான் யார்?
3. கெலன்கெல்லர் நிதியின் மூலம் கிடைத்ததொகை எவ்வளவு?
4. கெலன்கெல்லர் தனது வாழ்நாளை யாருக்காகச் செலவிட்டார்?
5. கெலன்கெல்லர் நிதி யாருக்காக உருவாக்கப்பட்டது?

## பகுதி-4

**36. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க.** **1x 5 = 5**

**(அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவுசெய்து பொருத்தமான தலைப்பைத் தருக.**

கண்ணன் பத்தாம் வகுப்பில் படிக்கிறான் . காலையில் ஐந்து மணிக்கே எழுந்துவிடுவான். அவனுடைய அம்மாவுக்கு அவனால் இயன்ற உதவிகளைச் செய்வான். பின்னர் எட்டு மணியளவில் நடந்தே பள்ளிக்குச் செல்வான். ஒருநாள் ஓட்டமும் நடையுமாக பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தான் . அப்போது சாலையில் ......................................................................................

**அல்லது**

**(ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டுவரிகளுக்குக் குறையாமல் கவிதைஒன்று எழுதுக.**

பள்ளி அல்லது நட்பு

## பகுதி-5

**37. கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தினை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களில் ஏதேனும் ஐந்தினை எடுத்தெழுதுக.** **1x 5 = 5**

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
    தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்.
இறவாத புகழுடைய புதுநூல்கள்
    தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
    சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
    அதை வணக்கம் செய்தல் வேண்டும்.

**பகுதி-6** **1x 5 = 5**

**38.** கலையமுதன் என்பவர் பின்வரும் தன் குடும்ப உறுப்பினர்களுடன் திருநெல்வேலியிலிருந்து சென்னை செல்வதற்காக நெல்லை விரைவுவண்டியில் (வண்டி எண்: 12633) இரண்டாம் வகுப்பு தூங்கும் வசதி கொண்ட பெட்டியில் 02-05-2017 அன்று பயணம் செய்ய உள்ளார். பின் 10-05-2017 அன்று அதே வண்டியில் சென்னையிலிருந்து திரும்புகிறார். அவருக்காகக் கீழ்க்காணும் முன்பதிவுப் படிவத்தினை நிரப்புக.

| | பெயர் | பால் | வயது |
|---|---|---|---|
| 1. | கலையமுதன் | ஆண் | 55 |
| 2. | அமுதவேணி | பெண் | 50 |
| 3. | அன்புச்செல்வன் | ஆண் | 30 |
| 4. | கலைமதி | பெண் | 27 |
| 5. | அறிவழகன் | ஆண் | 03 |

**பகுதி-7**

**39. (அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து அதுகுறித்த வினாக்களுக்கு விடையளிக்க.** **3+2=5**

மாறன் பத்தாம் வகுப்புப் படிக்கிறான். சில நாள்களாக அவனுடைய செயல்களில் மாற்றம் ஏற்பட்டிருப்பதைப் பெற்றோர் உணர்ந்தனர். பள்ளி நேரம் முடிந்ததும் அவன் வீட்டிற்குத் தாமதமாக வருகின்றான். காரணம் கேட்டால், உண்மையைச் சொல்ல மறுக்கிறான். வீட்டில் அடிக்கடி பணம் கேட்டுத் தொந்தரவு செய்கிறான். நல்ல நண்பர்களுடன் பழகாததே இதற்குக் காரணம் என்று பெற்றோர் நினைக்கின்றனர்.

1. **பெற்றோர் மாறனைப் பற்றி நினைப்பது சரியா?**
2. **நாம் எப்படிப்பட்டவர்களோடு நட்புக் கொள்ள வேண்டும்?**
3. **நீ உன் பெற்றோரிடம் எவ்வாறு நடந்து கொள்வாய்?**

**ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்துவிடையளிக்க.**

பெற்றோர் எதிர்பாராத வகையில் வெளியூர் சென்றுவிட பூங்குழலி மட்டும் தனியாகப் படித்துக் கொண்டு இருக்கிறாள். பூங்குழலியின் தந்தையைத்தேடி ஒருவர் வருகிறார். தந்தை வெளியூர் சென்றிருக்கிறார் என்று பூங்குழலி கூறினாலும் அவர் அதனைக் கேட்காமல், அவளிடம் பேசிக் கொண்டே இருக்கிறார்.

1. **அந்தச் சூழ்நிலையைப் பூங்குழலி எவ்வாறு எதிர்கொள்வாள்?**
2. **நீங்கள் பூங்குழலியாக இருந்தால் என்ன செய்வீர்கள்?**

**பிரிவு–IV(மதிப்பெண்) : 20**

**பகுதி-1**

**40. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க.** **1x 10 = 10**

(அ) குடிநீர் வசதி வேண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு கூட்டு விண்ணப்பம் எழுதுக.

**(அல்லது)**

(ஆ) நீவிர் கண்டுகளித்த இடம் குறித்து உமது நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக.

**பகுதி-2**

**41. கீழுள்ள வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்குக் குறிப்புகளைக் கொண்டு ஒருபக்க அளவில் கட்டுரை எழுதுக. தலைப்பு ஒன்று தருக.** **1x 10 = 10**

(அ) கணினி - தோற்றம் - வளர்ச்சி - இணையம் - இணையதள வசதி - கணினிவழிக் கல்வி - கணினியின் வியத்தகு சாதனைகள் - பயன்படும் துறைகள் -உலகம் உள்ளங்கையில்.

**(அல்லது)**

(ஆ) நூலகம் - நூலகத்தின் தோற்றம் - நூலகத்தின் பல்வேறு பெயர்கள் - பொது நூலகத்துறை - நூலகத்தின் பயன்கள் - பள்ளி நூலகம் - தமிழக நூலகங்கள்.